# கிராம நிர்வாக அலுவலர் பணித் தேர்வு பாடத்திட்டம்

## பொது அறிவு

---

### அலகு - I பொது அறிவியல் GENERAL SCIENCE)

#### இயற்பியல் (Physics)

- ✓ பிரபஞ்சம், பொதுவான அறிவியல் விதிகள், அறிவியல் கருவிகள், கண்டுபிடிப்புகள்
- ✓ தேசிய அறிவியல் ஆய்வுக்கூடங்கள், அறிவியல் கலைச் சொற்கள்
- ✓ எந்திரவியல் மற்றும் பருப்பொருளின் தன்மைகள், அளவீடுகள், தர அலகுகள்.
- ✓ விசை, இயக்கம் மற்றும் ஆற்றல் - மின்னாற்றல் மற்றும் எந்திர ஆற்றல்.
- ✓ வெப்பம், ஒளி மற்றும் ஒலி - அணு மற்றும் உட்கரு இயற்பியல்.

#### வேதியியல் (Chemistry)

- ✓ தனிமங்கள் மற்றும் சேர்மங்கள் - அமிலங்கள், காரங்கள் மற்றும் உப்புகள்
- ✓ ஆக்சிஜனேற்றம் மற்றும் ஒடுக்கம், தாதுக்கள் மற்றும் கனிமங்களின் வேதியியல்.
- ✓ கார்பன், நைட்ரஜன் மற்றும் அதன் சேர்மங்கள்
- ✓ வேதி உரங்கள், பூச்சிக்கொல்லிகள்

#### தாவரவியல் (Botony)

- ✓ உயிர் அறிவியலின் அடிப்படைக் கருத்துக்கள்.
- ✓ செல் - உயிரின் அடிப்படை அலகு.
- ✓ உயிரிகளின் வகைபாடு
- ✓ ஊட்டச்சத்துகள் மற்றும் சம விகித உணவு
- ✓ சுவாசம்

#### விலங்கியல் (Zoology)

- ✓ இரத்தம் மற்றும் இரத்த சுற்றோட்டம்
- ✓ நாளமில்லா சுரபி மண்டலம், இனப்பெருக்க மண்டலம்.
- ✓ மரபியல் - மரபுப் பண்பு குறித்த அறிவியல்.
- ✓ சுற்றுச் சூழல், சூழலியல், உயிரி பன்மைபரவல் மற்றும் இதன் பாதுகாப்பு
- ✓ சுகாதாரம், மனித நோய்கள், தடுப்பு மற்றும் தீர்வுமுறைகள்.
- ✓ பரவும் தொற்று நோய்கள், பரவா நோய்கள்

### அலகு - II, நடப்பு நிகழ்வுகள் (CURRENT EVENTS)

#### வரலாறு (History)

- ✓ சமீபத்திய தேசிய நிகழ்வுகள்.
- ✓ தேசிய சின்னம், மாநிலங்கள் குறித்த பொது விவரங்கள்.
- ✓ செய்திகளில் இடம்பிடித்த பிரபல நபர்கள் மற்றும் இடங்கள், விளையாட்டுச் செய்திகள்.
- ✓ புத்தகங்கள் மற்றும் அதன் ஆசிரியர்கள், பரிசுகள் மற்றும் விருதுகள்,
- ✓ சமீபத்திய வரலாற்று முக்கிய நிகழ்வுகள்.
- ✓ இந்தியா மற்றும் அதன் அண்டை நாடுகள்.
- ✓ முக்கிய பொறுப்புகளில் இருப்போர் மற்றும் புதிய நியமனங்கள்.

#### அரசியல் அறிவியல் (Political Science)

- ✓ பொதுத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் சிக்கல்கள்.
- ✓ இந்தியாவில் அரசியல் கட்சிகள், அரசியல் முறைகள்.
- ✓ அரசியல் விழிப்புணர்வு & பொது நிர்வாகம்
- ✓ தன்னார்வ அமைப்புகளின் பங்கு
- ✓ அரசின் நலத்திட்டங்கள் அதன் பயன்பாடுகள்.

#### புவியியல் (Geography)

- ✓ புவியியல்சார் சுவடுகள்.

#### பொருளாதாரம் (Economics)

- ✓ நடப்பு சமூக பொருளாதார சிக்கல்கள்

#### அறிவியல் (Science)

- ✓ அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் சமீபத்திய கண்டுபிடிப்புகள்.

### அலகு - III, புவியியல் (GEOGRAPHY)

- ✓ புவி மற்றும் பிரபஞ்சவியல், சூரியக் குடும்பம்.
- ✓ பருவகாலம், மழைப்பொழிவு, வானிலை மற்றும் காலநிலை
- ✓ நீர் ஆதாரங்கள், இந்தியாவில் ஆறுகள், மண் வகைகள், கனிமங்கள் மற்றும் இயற்கை வளங்கள்.
- ✓ இயற்கைத் தாவரங்கள், காடுகள் & வனவிலங்குகள்.

RAMKI

- ✓ வேளாண் பயிர்முறை, கால்நடைகள் மீன்வளம்.
- ✓ போக்குவரத்து, தொலைதொடர்பு
- ✓ சமூகப் புவியியல், மக்கட்தொகை, மக்கள் நெருக்கம் மற்றும் பரவல்.
- ✓ இயற்கைப் பேரிடர்கள், பேரிடர் மேலாண்மை.

**அலகு-IV, இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாடு (HISTORY AND CULTURE OF INDIA AND TAMIL NADU)**

- ✓ சிந்துசமவெளி நாகரிகம், குப்தர்கள்,
- ✓ டில்லி சுல்தானியர்கள், முகலாயர்கள்
- ✓ மராத்தியர்கள், விஜயநகரம் மற்றும் பாமினி அரசுகள்,
- ✓ தென்னிந்திய வரலாறு, தமிழ் மக்களின் பண்பாட்டு மரபுகள்.
- ✓ சுதந்திரத்திற்கு பிந்தய இந்தியா
- ✓ இந்தியப் பண்பாட்டின் சிறப்பியல்புகள்
- ✓ வேற்றுமையில் ஒற்றுமை - இனம், நிறம், மொழி, பழக்கங்கள் - மதச்சார்பற்ற நாடாக இந்தியா.
- ✓ நுண்கலைகள், நடனம், நாடக, இசை தொடர்பான அமைப்புகள்.
- ✓ தமிழ் நாட்டில் பகுத்தறிவு, திராவிட இயக்கங்களின் வளர்ச்சி.
- ✓ அரசியல் கட்சிகள், பிரபலமான மக்கள் நலத்திட்டங்கள்.

**அலகு - V, இந்திய அரசியல் (INDIAN POLITY)**

- ✓ இந்திய அரசியலமைப்பு, அரசியலமைப்பின் முகப்புரை.
- ✓ அரசியலமைப்பின் சிறப்பம்சங்கள், ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் ஆட்சிப்பகுதிகள்.
- ✓ அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், மனித உரிமை சாசனம்.
- ✓ ஒன்றிய(மத்திய) சட்டம் இயற்றும் அவை நாடாளுமன்றம்.
- ✓ மாநில செயலாட்சி - மாநில சட்டம் இயற்றும் அவை - சட்டமன்றம்
- ✓ உள்ளாட்சி அரசாங்கம் (பஞ்சாயத் ராஜ்)- தமிழ் நாடு
- ✓ இந்திய நீதித்துறை - சட்டத்தின் ஆட்சி / சட்டத்தின் செயல்முறை
- ✓ இந்திய கூட்டாட்சித்துவம் - மத்திய மாநில அரசு உறவுகள் - நெருக்கடிநிலைகள்
- ✓ தேர்தல்கள்,இந்திய ஒன்றிய, மாநில அளவில் தேர்தல் ஆணையங்கள்.
- ✓ அரசியலமைப்பின் அட்டவணைகள்.
- ✓ அலுவல் மொழி மற்றும் அட்டவணை-VIII
- ✓ இந்திய பொதுவாழ்வில் ஊழல் - ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் - மத்திய
- ✓ கண்காணிப்பு ஆணையம் (CVC)
- ✓ மக்கள் நடுவர் மன்றங்கள் / லோக் அதாலத் (Lok Adalats),குறைதீர்ப்பாளர் (Ombudsman),
- ✓ இந்திய தலைமை கணக்கு தணிக்கையர் (CAG)
- ✓ தகவல் அறியும் உரிமை - மத்திய, மாநில அளவிலான ஆணையங்கள்.
- ✓ மகளிருக்கு அதிகாரமளித்தல்
- ✓ நுகர்வோர் உரிமைகள் பாதுகாத்தல்,

**அலகு-VI, இந்திய பொருளாதாரம் (INDIAN ECONOMY)**

- ✓ இந்திய பொருளாதாரத்தின் தன்மைகள், ஐந்தாண்டுத் திட்ட மாதிரிகள் குறித்த மதிப்பீடு
- ✓ நிலச்சீர்திருத்தங்கள் & வேளாண்மை, வேளாண்மையில் அறிவியலின் பயன்பாடுகள்.
- ✓ தொழிற்வளர்ச்சி
- ✓ ஊரக வளர்ச்சித் திட்டங்கள்.
- ✓ சமூகம்சார் பொருளாதாரப் பிரச்சினைகள்: மக்கள் தொகை, கல்வி, சுகாதாரம்,
- ✓ வேலைவாய்ப்பு, வறுமை.
- ✓ தமிழ் நாட்டின் பொருளாதாரப் போக்கு

**அலகு - VII, இந்திய தேசிய இயக்கம் (INDIAN NATIONAL MOVEMENT)**

- ✓ பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான தொடக்க கால கிளர்ச்சிகள்
- ✓ இந்திய தேசியக் காங்கிரஸ்
- ✓ காந்தி, நேரு, தாகூர், நேதாஜி போன்ற தலைவர்களின் பங்கு
- ✓ சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் நாட்டின் பங்களிப்பு - இராஜாஜி,வ.உ.சி, பெரியார், பாரதியார் & ஏனையோர்.
- ✓ அரசியல் கட்சிகளின் தோற்றம்,
- ✓ இந்திய சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசியல் முறையமைப்பு.

RAMKI

**அலகு - VIII, மனத்திறன் சோதனை (MENTAL ABILITY TEST)**

- ✓ தரவுகளை தகவல்களாக மாற்றுதல்.
- ✓ தகவல்கள் சேகரித்தல், ஒருங்கமைத்தல், வெளிப்படுத்துதல்,
- ✓ அட்டவணைகள், வரைபடங்கள், விளக்கப்படங்கள்
- ✓ தகவல்களின் பகுப்பாய்வு,
- ✓ சுருக்குதல், சதவீதம், மீ.பெ.வ, மற்றும் மீ.சி.ம கண்டுபிடித்தல்
- ✓ விகிதங்கள், தனி வட்டி, கூட்டுவட்டி
- ✓ பரப்பளவு, கன அளவு, நேரமும் வேலையும்
- ✓ முடிவெடுத்தல் மற்றும் பிரச்சினைகள் தீர்வு செய்தல்
- ✓ தர்க்கரீதியாக பகுத்தறியும் திறன், புதிர்கள், பகடை.
- ✓ விசுவல் பகுத்தறியும் திறன், எழுத்து-எண் பகுத்தறியும் திறன்.
- ✓ எண் வரிசை- தர்க்க எண் / எழுத்து / படங்களின் தொடர் வரிசை

## தேர்வு முறை எப்படி...?

- ✓ கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி.
- ✓ வயது வரம்பு பொதுப் பிரிவிற்கு 21 - 30, (BC/BCM/MBC/SC/ SCA / ST பிரிவினர்களுக்கு 40 வரை உச்ச வயது வரம்பு சலுகை உண்டு).
- ✓ BC/BCM/MBC/SC/ SCA / ST பிரிவினர் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியை விட அதிகம் (+2 / பட்டம்) படித்திருந்தால் வயது உச்சவரம்பு இல்லை என்ற சலுகை இத்தேர்வுக்கு பொருந்தாது.
- ✓ தேர்வு 200 வினாக்களுடன் கூடிய கொள்குறிவகைத் தேர்வாக இருக்கும். பொது அறிவு + கிராம நிர்வாகம் + மனத்திறன் சோதனை (100 வினாக்கள்) + பொதுத்தமிழ் 100 வினாக்கள்.
- ✓ மூன்று மணி நேரத்தில் பதிலளிக்க வேண்டும். மொத்த மதிப்பெண்கள் 300 ஆகும்.
- ✓ ஒரே கட்டத் தேர்வு மட்டுமே. அதில் தேர்வு பெறுவோருக்கு அடுத்த கட்டமாக பணியிடம் ஒதுக்கீடு செய்திட கலந்தாய்வு நடைபெறும்.
- ✓ பணியமர்த்தப்பட்ட கிராமத்திலேயே வசிக்க வேண்டும். பிணைத்தொகையாக பணியில் சேரும்போது OC பிரிவினர் ரூ. 2000 மற்றும் BC /BCM /MBC பிரிவினர் ரூ. 1000 செலுத்த வேண்டியிருக்கும். SC /SCA/ ST பிரிவினருக்கு பிணைத் தொகை இல்லை.
- ✓ முழுமையான விவரங்களுக்கு தொடர்புடைய விளம்பரம், பணி விதிகள் இணையத்தளங்களை கண்டுஅறியலாம்.
- ✓ பொது அறிவு, மனத்திறன் சோதனை, பொதுத் தமிழ் பகுதிகளுக்கு குரூப்-4, குரூப்-2 தேர்வுகளுக்கு தயாராவது போல் படிக்கவேண்டும். கூடுதலாக கிராம நிர்வாகம் பகுதிக்கு புதிய வி.எ.ஓ களுக்கு அரசு அளிக்கும் பயிற்சி கையேடு, அரசின் நலத்திட்டங்கள், அரசு இணையத்தளம் ஆகியவற்றின் மூலம் விவரங்கள் சேகரித்து படிக்கவேண்டும்.

- வாழ்த்துக்களுடன்

**- த. இராமகிருட்டிணன். எம்.காம்.,**

போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்

RAMKI

## கிராம நிர்வாகத்தின் அடிப்படைகள்

(Basics of Village Administration)

1. கிராமம் மற்றும் வருவாய் நிர்வாகத்தில் கிராம நிர்வாக அலுவலரின் பங்கு, பணிகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள். (கிராம நிர்வாக அலுவலர்கள் (கி.நி.அ)காவல் துறைக்கு உதவுதல், அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் செயலாக்கத்தில் பங்கேற்றல், வருமானம் சாதி ஆதரவற்ற விதவை, திருமணமான நிலை, பட்டா மற்றும் பல்வேறு சான்றிதழ்கள் பெறும்பொருட்டு பரிந்துரைகள் செய்தல் உள்பட வினாக்கள் அமையலாம்)
2. கி.நி.அ பராமரிக்கும் பல்வேறு வருவாய் நிர்வாக ஆவணங்களான "அ" பதிவேடு, பட்டா, சிட்டா, அடங்கல் முதலியன.
3. கி.நி.அ பராமரிக்கும் மற்றும் ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும் தயாரிக்கும் கணக்குகள் .
4. நிலங்களின் வகைபாடு குறித்த அடிப்படை கருத்துக்கள் / விவரங்கள்
5. தீர்வைகள் நிர்ணயித்தல் மற்றும் ஆண்டு வருவாய் கேட்புகள் குறித்த அடிப்படை விவரங்கள்.
6. அரசுக்கு பாத்தியப்பட்டது உள்ளிட்ட பல்வேறு நிலங்களின் பாசன முறைகள் குறித்த அடிப்படை விவரங்கள்.
7. வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி)- நோக்கம், அதனை நடத்தும் அலுவலர், அதனை முடிப்பதற்கான கால வரையறை, ஆவணப்பதிவுகள் கூர்ந்தாய்வு செய்தல், திருத்தங்கள் செய்தல், புதிய பட்டாக்கள் வழங்குதல், கிராம - வட்ட கணக்குகளை முடித்தல், கிராம புள்ளியியல் பதிவேடுகள், கர்ணம்களின் கருவிகள், வரைபடங்கள் மற்றும் பதிவேடுகள் (RSO-12) பஞ்சாயத்து வருவாய் தொடர்புடைய கணக்குகளை கூர்ந்தாய்வு செய்தல்.
8. இயற்கை சீற்றங்களின் போது கி.நி.அ பங்கு
9. கிராமங்கள் மற்றும் நகரங்களில் நில ஒப்படைவு செய்தல் / வீட்டுமனை இடம் ஒப்படைவு செய்தல் தொடர்பான அடிப்படை விவரங்கள்.
10. கால்நடைகள் மற்றும் பால்ப்பண்ணைகளுக்காக நிலங்கள் வழங்குதல்.
11. கிரவுண்ட் ரெண்ட் மற்றும் கிவிட் ரெண்ட் உள்ளிட்ட தீர்வை விதிப்புகள்
12. நில வருவாய் செலுத்த விலக்களிக்கப்பட்டவை.
13. அரசுக்கு சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்புகள், நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905 குறித்த அடிப்படை விவரங்கள், "ஏ" குறிப்பாணை மற்றும் "பி" குறிப்பாணை (A Memo & B Memo) வழங்குதல்
14. நிலங்களின் உடைமை ஆவணம், பட்டா, பட்டா வழங்குதல், கூட்டுப்பட்டா வழங்குதல்.
15. ரயத்வாரி உடைமையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்.
16. வயது, திருமண நிலை, வருமானம், குடியிருப்பு குறித்து விசாரிக்கும் நடைமுறைகள்.
17. அடங்கல், சிட்டா மற்றும் இதர கிராம பதிவேடுகளை பராமரித்தல் மற்றும் அதன் நகல்கள் வழங்குதல் குறித்த நடைமுறைகள்
18. நில அளவை, நில உட்பிரிவு செய்தல் நடைமுறைகள் மற்றும் புல வரைபடப் புத்தகம் குறித்த விபரங்கள்.
19. இந்திய அரசியலமைப்பின் சரத்து 51 ஏ (ஜி)இல் விவரித்துள்ள அடிப்படைக் கடமைகளில் குறிப்பிட்டுள்ளவாறு காடுகள், ஏரிகள், ஆறுகள், மற்றும் வன விலங்குகள் உள்ளிட்ட இயற்கை, சுற்றுச்சூழல் ஆகியவற்றை காப்பதை உறுதிசெய்தல்.
20. பல்வேறு தலைப்புகளின் கீழ் கி.நி.அ வசூலிக்கும் நேரடி வருவாய் வசூல் குறித்த விவரங்கள்.
21. திருவிழாக்கள் மற்றும் கிராமத்தின் பொது விழாக்களின் போது கி.நி.அலுவலரின் சிறப்பு கடமைகள்.
22. வருவாய் வசூலிப்புச் சட்டம் குறித்த அடிப்படை விவரங்கள்.
23. வனப்பகுதி நிலங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்.
24. சந்தன மரங்கள் மற்றும் இதர மதிப்புமிகுந்த மரங்களை விற்றல் குறித்த அடிப்படை விவரங்கள்
25. ஆதிவாசிகள் / பழங்குடியினர் குறித்த விவரங்கள் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பு, அரசின் உதவிகள் கிடைக்கச்செய்வதில் கி.நி.அ பங்கு

**- த. இராமகிருட்டிணன். எம்.காம்.,**

RAMKI